சென்னை–5, சேப்பாக்கம், வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.

பிறப்பிப்பவர் – திரு வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப.,

நாள். 26.09.2018

செ.மு. ஆணை எண். அபி6 / 47967 / 2018

பொருள்:– பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 06.02.2011 அன்று அமரரான திரு. வெ. ரகுபதி, வேளாண்மை உதவி அலுவலர் – வாரிசு / மகன் திரு. R. தியாகராஜன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக பணியமர்வில் கிடங்கு மேலாளர் (கிரம்–3) ஆக பணிநியமனம் செய்து – ஒதுக்கீடு ஆணை வழங்குதல்– குறித்து.

பார்வை:–
1 அரசு ஆணை எண். 560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 3–8–1977.
2 அரசு ஆணை எண். 16, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (P) துறை, நாள் 21–2–2006.
3 அரசு ஆணை எண். 61, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1) துறை, நாள் 19–7–2006
4 அரசு ஆணை எண். 135, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் ( Q2 ) துறை, நாள் 4–10–2006.
5 அரசு கடித எண். 126 /Q1 / 2006, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 16–9–2006.
6 அரசாணை எண். 42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 12–3–2007.
7 அரசு கடித எண் 86/க்யூ.1/ 2010, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4.5.2010.
8 சேலம், வேளாண்மை இணை இயக்குநர் கடித எண். அ2/14373/2017, நாள். 16.04.2018.

****

ஆணை–

சேலம், வேளாண்மை இணை இயக்குநர் இயக்குநர், கட்டுப்பாட்டில் காடையாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் வேளாண்மை உதவி அலுவலர் ஆகப் பணிபுரிந்து வந்தபோது 06.02.2011 அன்று அமரரான வெ. ரகுபதி, என்பவரின் வாரிசு / மகன் திரு. R. தியாகராஜன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட கோரி பார்வை 8–ல் கண்டுள்ளபடி, சேலம், வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் மூலமாக கருத்துரு பெறப்பட்டது.

2) இக்கருத்துருவினை ஆராய்ந்து கருத்துருவின் அடிப்படையிலும் பார்வையில் கண்டுள்ள அரசாணைகளின் அடிப்படையிலும் அமரரான வெ. ரகுபதி, வேளாண்மை உதவி அலுவலர் குடும்பம் வறிய நிலையிலிருந்து மீள அன்னாரின் வாரிசுதாரரான மகன் திரு. R. தியாகராஜன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ரூ.19500-62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் கிடங்கு மேலாளர் (கிரம்–3) ஆகப் பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது. இவருக்கு பணியிட ஆணை வழங்க வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3) திரு. R. தியாகராஜன் அவர்களுக்கு உரிய பணியிட உத்திரவு வழங்கிடவும் இவர் பணியில் சேரும் சமயம் மருத்துவ உடற்தகுதிச் சான்றினை பெற்ற பின்னரே பணியில் சேர அனுமதிக்க வேண்டும் எனவும் விழுப்புரம், வேளாண்மை இணை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

4) திரு. R. தியாகராஜன் அவர்கள் கிடங்கு மேலாளர் (தரம்–3) ஆகப் பணியில் சேர்ந்து கொண்ட விவரம், நியமனம் வழங்கிய ஆணை நகல்களுடன் இவ்வியக்ககத்திற்கு தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) திரு. R. தியாகராஜன் அவர்கள் கிடங்கு மேலாளர் (தரம்–3) ஆக தற்காலிக பணியமர்வில் நியமனம் செய்யப்படுவதால் இவரது பணியினை வரன்முறை செய்து அரசாணை பெறுவதற்கு உரிய கருத்துருவினை அசல் ஆவணங்களுடன் முழு வடிவில் இவ்வியக்ககத்திற்கு 3 மாத காலத்திற்குள் அனுப்பி வைத்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6) பார்வை 8–ல் கண்ட கடிதத்தின் மூலமாக கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட அமரர் வெ. ரகுபதி, வேளாண்மை உதவி அலுவலர் அவர்களது பணிப்பதிவேடு மற்றும் அசல் ஆவணங்கள் யாவும் இணைப்பில் கண்ட விவரப்படி இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அவற்றினைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை வழங்கிட விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

வேளாண்மை இயக்குநர்.

இணைப்பு – திரு. வெ. ரகுபதி, (லேட்) அவர்களின் பணிப்பதிவேடு – 3 தொகுதிகள்.
மற்றும் இணைப்பில் வ.எண். 1 முதல் 17
வரையிலான ஆவணங்கள் .

பெறுநர்
திரு. R. தியாகராஜன்,
த/பெ. திரு. வெ. ரகுபதி, (லேட்),
142/483, திரு. வி. க. பாதை
அம்மாப்பேட்டை,
சேலம் மாவட்டம் –3. (பதிவஞ்சலில்)

நகல்: வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம். (பதிவஞ்சலில்).
நகல்: வேளாண்மை இணை இயக்குநர், சேலம்.
நகல்: வேளாண்மை உதவி இயக்குநர், காடையாம்பட்டி.
நகல்: அபபி. பிரிவு இவ்வலுவலகம்.
நகல்: அநிபி–4. இருக்கை.
நகல்: அநிபி–6.இருப்புக் கோப்பு.

26/9/18